**விவசாயத் தொழிலாளர்கள் சங்க மாநாடு: வரவேற்புக் குழுவினர் ஆலோசனை**

First Published : 21 Jun 2010 01:32:55 PM IST

கிருஷ்ணகிரி, ஜூன் 20:  அகில இந்திய விவசாயத் தொழிலாளர்கள் சங்கத்தின் வரவேற்புக் குழுக் கூட்டம் கிருஷ்ணகிரியில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கிருஷ்ணகிரியில் உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு, சங்கப் பிரமுகர் டி.கோதண்டராமன் தலைமை வகித்தார்.

திருச்சியில் ஜூலை 17 முதல் 19-ம் தேதி வரை நடைபெறும் சங்கத்தின் அகில இந்தி மாநாட்டுக்கு வருகை தரும் உள்நாட்டு, வெளிநாட்டுப் பிரதிநிதிகளை வரவேற்பது,  இவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்துக்கு வருகை தரும்போது சிறப்பான முறையில் வரவேற்பது, சி.முனுசாமி தலைமையில் 35 பேர் உறுப்பினர்கள் கொண்ட வரவேற்புக் குழு அமைப்பது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

சங்கத்தின் மாநில பொதுச்செயலர் ஜி.மணி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாவட்டச் செயலர் டி.ரவீந்திரன், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் இருதயராஜ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**விவசாயத் தொழிலாளர்கள் சங்க மாநாடு: வரவேற்புக் குழுவினர் ஆலோசனை**

First Published : 21 Jun 2010 01:32:55 PM IST

கிருஷ்ணகிரி, ஜூன் 20:  அகில இந்திய விவசாயத் தொழிலாளர்கள் சங்கத்தின் வரவேற்புக் குழுக் கூட்டம் கிருஷ்ணகிரியில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கிருஷ்ணகிரியில் உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு, சங்கப் பிரமுகர் டி.கோதண்டராமன் தலைமை வகித்தார்.

திருச்சியில் ஜூலை 17 முதல் 19-ம் தேதி வரை நடைபெறும் சங்கத்தின் அகில இந்தி மாநாட்டுக்கு வருகை தரும் உள்நாட்டு, வெளிநாட்டுப் பிரதிநிதிகளை வரவேற்பது,  இவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்துக்கு வருகை தரும்போது சிறப்பான முறையில் வரவேற்பது, சி.முனுசாமி தலைமையில் 35 பேர் உறுப்பினர்கள் கொண்ட வரவேற்புக் குழு அமைப்பது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

சங்கத்தின் மாநில பொதுச்செயலர் ஜி.மணி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாவட்டச் செயலர் டி.ரவீந்திரன், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் இருதயராஜ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**தென்னைப் பொருளாலான செம்மொழி மாநாட்டு இலச்சினை: பொள்ளாச்சி கல்லூரி மாணவர்கள் சாதனை**

First Published : 21 Jun 2010 12:00:39 PM IST

பொள்ளாச்சி, ஜூன் 20: பொள்ளாச்சி பி.ஏ. பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் தென்னைப் பொருள்களின் மூலம் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு இலச்சினையை உருவாக்கியுள்ளனர்.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு வரும் 23-ம் தேதி முதல் 27-ம் தேதி வரை கோவையில் நடக்கிறது. இதற்கான இலச்சினையை பொள்ளாச்சியில் கல்லூரி மாணவர்கள் உருவாக்கியுள்ளனர்.
பொள்ளாச்சிப் பகுதியில் கிடைக்கும் தென்னைப் பொருள்களைப் பயன்படுத்தி பொள்ளாச்சி பி.ஏ. பொறியியல் தொழில் நுட்பக் கல்லூரி மாணவ மாணவியர் 48 மணி நேரம் உழைத்து இந்த இலச்சினையை உருவாக்கியுள்ளனர். தென்னம் பாளை, ஓலை, குரும்பை, தேங்காய்த் தொட்டி ஆகிய தென்னைப் பொருள்கள் இந்த இலச்சினையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இலச்சினைக்காக எவ்வித செயற்கை வண்ணக் கலப்புகளும் பயன்படுத்தப்படவில்லை.
பொறியியல் கல்லூரியின் 50 மாணவர்கள் சேர்ந்து, பிரமாண்டமான இலச்சினையை கல்லூரியின் முதன்மைக் கட்டட நுழைவாயிலில் அமைத்துள்ளனர். இலச்சினையில் அமைக்கப்பட்ட திருவள்ளுவர் சிலையின் மொத்த உயரம் 50 அடி. முழுக்க முழுக்க தென்னைப் பொருள்களால் இலச்சினையை அமைத்த மாணவ மாணவியருக்கு கல்லூரித் தலைவர் பி.அப்புக்குட்டி, முதல்வர் ஆர்.கே.சுரேஷ், நிர்வாக அலுவலர் ஆர்.பழனிசாமி ஆகியோர் பாராட்டுத் தெரிவித்தனர்.

**பயிர் பாதுகாப்பு மருந்துகளை பரிசோதனை செய்ய ஆய்வுக் கூடம்: தோட்டக் கலை அதிகாரி கே.தேவராஜன்**
First Published : 21 Jun 2010 12:08:58 PM IST

உதகை, ஜூன் 20: நீலகிரி மாவட்டத்தில் பயிர் பாதுகாப்பு மருந்துகளை தரப் பரிசோதனை செய்வதற்காக விரைவில் ஆய்வுக் கூடம் அமைக்கப்படவுள்ளதாக தோட்டக் கலை இணை இயக்குநர்(பொ) கே.தேவராஜன் தெரிவித்தார்.
நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், உதகையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மாவட்ட ஆட்சியர் அர்ச்சனா பட்நாயக் தலைமையில் நடைபெற்றது.
நீலகிரி மாவட்ட உருளைக் கிழங்கு மற்றும் காய்கறி உற்பத்தியாளர்கள் சங்கம், கேத்தி பாலடா காட்டேரி நீர்ப் பிடிப்பு பகுதி விவசாயிகள் சங்கம், மந்தனை பாரத இளைஞர்கள் சங்கம், கீளூர் பொது நல சங்கம் ஆகியவற்றின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள், தோட்டக் கலை இணை இயக்குநர் இஸ்ரவேல் தலைமையிலான அதிகாரிகளும், ஏராளமான விவசாயிகளும் பங்கேற்றனர்.
விவசாய சங்கங்களிடமிருந்து பெறப்பட்ட 34 கோரிக்கை மனுக்களை, உரிய துறை அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு, அவற்றின் விபரங்கள் விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டன.
பாலகொலொ ஊராட்சிக்குட்பட்ட மந்தனை சக்கோட்டி முதல் பெங்கால்மட்டம் வரையிலான 2 கி.மீ. தூரமுள்ள சாலையில் 1 கி.மீ. தூரம் தார்சாலை அமைக்கப்படுகிறது. மீதமுள்ள சாலையை வரும் நிதியாண்டில் அமைத்து தர நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கப்பட்டது.
மேலும், கிராண்டப் முதல் தோடா காலனி வரையிலான சாலை மேம்பாட்டு பணியானது ரூ.3.65 லட்சம் மதிப்பில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் 2009-2010-ம் ஆண்டில் எடுக்கப்பட்டு இப்பணி தற்போது நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.
அதேபோல, கிராமங்களில் சுகாதார கழிப்பிடங்கள் அரசு சார்பில் கட்டித் தரப்பட்டு வருவதாகவும், முழு சுகாதார இயக்கத்தின் கீழ் தனி நபர் கழிப்பிடங்கள் கட்டியப் பயனாளிகளுக்கு அரசு மானியமாக தலா ரூ.1,200 வீதம் வழங்கப்பட்டு வருவதாகவும் உதகை ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் தெரிவித்தார்.
தேசிய தோட்டக் கலை இயக்கத்தில் 2010-2011ம் ஆண்டில் விசையில் இயங்கும் இயந்திரங்கள், கருவிகள் மற்றும் பயிர் பாதுகாப்பு கருவிகள் 50 சத மானியத்தில் வழங்கப்படவுள்ளதாகவும், நீலகிரி மாவட்டத்தில் பயிர் பாதுகாப்பு மருந்துகளை தரப் பரிசோதனை செய்ய ஒரு ஆய்வுக் கூடம் நிறுவ நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தோட்டக் கலை இணை இயக்குநர்(பொ) கே.தேவராஜன் தெரிவித்தார்.

**விவசாயிகளுக்கு அடையாள அட்டை**

காஞ்சிபுரம்: காஞ்சிபுரத்தில் விவசாய பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 52 பேருக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டது. காஞ்சிபுரம் கலெக்டர் அலுவலக வளாகத்திலுள்ள மாவட்ட ஊராட்சி அலுவலகத்தில் நேற்று மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம் நடந்தது. கூட்டத்தில் தம்மனூர், வேளியூர், கிளார், மேல் அம்பி, கட்டவாக்கம் ஊராட்சிகளை சேர்ந்த 52 பேருக்கு விவசாய பாதுகாப்பு திட்டத்தின் கீழ், விவசாய பாதுகாப்பு அடையாள அட்டைகளை கலெக்டர் (பொறுப்பு) சிவராசு வழங்கினார். அப்போது கலெக்டரின் நேர்முக உதவியாளர் (மக்கள் குறை தீர்ப்பு) ராமச்சந்திரன், காஞ்சிபுரம் தனி தாசில்தார் உமையாள் உடனிருந்தனர்.

**கால்நடை மருத்துவமனையில் மாதிரி தீவன புல் வளர்ப்பு**

நடுவீரப்பட்டு : பண்ருட்டி அடுத்த சி.என்.பாளையம் அரசு கால்நடை மருத்துவமனையில் விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்பவர்கள் பயன்பெறும் வகையில் மாதிரி தீவன புல் வளர்க்கப்படுகிறது.இது குறித்து கால்நடை மருத்துவர் கமலக்கண்ணன் கூறுகையில், "தற்போது கால்நடைகளுக்கு புல் அதிகளவு கிடைக்காமல் கால் நடை வளர்ப்போர் அவதிப்படுகின்றனர். அப்படியே கிடைத்தாலும் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை உள்ளது.இதை கருத்தில் கொண்டு விவசாயிகள் மற் றும் கால்நடை வளர்ப்பவர்கள் எளிதில் வளர்க்க கூடிய குறைந்த நாட்களில் வளரக்கூடிய ரகங்களான கோ 3, கினியா ஆகிய ரக புல்கள் கால்நடை மருத்துவமனை வளாகத்தில் மாதிரிக்காக வளர்க்கப்படுகிறது. இதை அனைத்து விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்பவர்கள் வளர்த்து பயன் பெறலாம்' என கூறினார்.

**மரக்கன்றுகள் நடும் விழா**

திட்டக்குடி : திட்டக்குடி நகர இளைஞர் காங்., சார்பில் ராகுல் பிறந்த நாளில் மரக் கன்றுகள் நடும் விழா நடந்தது. நகர இளைஞர் காங்., தலைவர் ராஜ்குமார் தலைமை தாங்கினார். பொதுச் செயலாளர்கள் ஷேக்யூசுப் அலி, கர்ணன், முத்து, வார்டு தலைவர் தர்மா சின்னதுரை, ஞானசேகரன் முன்னிலை வகித் தனர். நகர துணைத் தலைவர் பாலமுருகன் வரவேற்றார். மாநில சேவாதள அமைப்பாளர் அன்பரசு, மனித உரி மைத் துறை நகர தலைவர் வேல்மணி, மாவட்ட அமைப்பாளர் சங்கர்லால், வக்கீல் பிரிவு நெடுஞ்செழியன் வாழ்த் திப் பேசினர்.இதையொட்டி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் அரிய வகையைச் சேர்ந்த 40 மரக் கன்றுகள் நடப்பட்டது.

தொடர்ந்து கோழியூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 300 மாணவர்களுக்கு நோட்டு, பேனா, சிலேட்டுகளை தொகுதி துணைத் தலைவர் தரணிதரன் வழங்கினார்.விழாவில் தலைமை ஆசிரியர்கள் ராஜன், முல் லைநாதன், என்.சி.சி., சண்முகம், ஆசிரியர்கள் மதிவாணன், ராமலிங்கம், வேளாண் ஆசிரியர் வசந்தா, போத்தீஸ் ரமேஷ், அருள் முருகன், வளர்மதி, சுரேஷ், ராஜமாணிக்கம், மலர்க்கொடி, ரகு, மணி, தீபன் ராஜ்குமார், விஜயகுமார் உட்பட பலர் பங் கேற்றனர். முன்னாள் வட்டாரத் தலைவர் குணசேரகன் நன்றி கூறினார்.

**கோபி பகுதியில் தட்டை பயறு சாகுபடி விலை குறைவால் விவசாயிகள் கவலை**

கோபிசெட்டிபாளையம்: கோபி பகுதியில் தட்டை பயிர் சாகுபடி விறுவிறுப்பாக தொடங்கியுள்ளது. அதிக விளைச்சல் காரணமாக தட்டை பயிர் விலை சற்று குறைந்துள்ளதால் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.
கோபி, நம்பியூர் மற்றும் டி.என்.பாளையம் உள்ளிட்ட பகுதியில் சமையலில் அன்றாடம் பயன்படுத்தப்பட்டு வரும் கத்தரிக்காய், வெண்டைக்காய், பாகற்காய், முள்ளங்கி, புடலை உள்ளிட்ட தோட்டக்கலை பயிர்கள் சமீப காலமாக அதிகளவில் பயிரிடப்படுகிறது. ஆண்டு முழுவதும் தண்ணீர் வசதி கொண்ட கோபி பகுதியில் விளையும் தோட்டக்கலை பயிர்கள் நல்ல சுவையும், அதிக எடையும் கொண்டதாக விளங்குவதால், பொதுமக்களிடையே நல்ல வரவேற்பு உண்டு.பருவமழை தவறியதால், குறைந்த தண்ணீரே தேவைப்படும் தட்டை பயிர்களை கோபி பகுதியை சேர்ந்த விவசாயிகள் பயிரிட்டனர். தற்போது தட்டை பயிர் முற்றி அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. கோபி, சிறுவலூர், குருமந்தூர், கடத்தூர், பொலவகாளிப்பாளையம், கள்ளிப்பட்டி, துறையம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் தட்டை பயிர் அறுவடை தொடங்கியுள்ளது. முற்றிய தட்டை பயிரை காயவைத்து, விற்பனை செய்ய சில மாதமாகும். ஆனால் கேரளாவில் முற்றாத இளம் தட்டை பயிர்களுக்கு நல்ல கிராக்கி உள்ளது.கேரளா மற்றும் தமிழகத்தில் முற்றாத இளம் தட்டை பயிர், பொரியலில் அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. உடனடியாக வருமானம் கிடைப்பதால், கோபி பகுதியை சேர்ந்த விவசாயிகள், தண்டுடன் கூடிய தட்டை பயிரை அறுவடை செய்து உடனடியாக விற்பனை செய்கின்றனர். கடந்த போகத்தில் ஒரு கிலோ தண்டுடன் கூடிய தட்டை பயிறு, 12 ரூபாய் வரை விற்றது.கோபி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் ஏற்பட்டுள்ள அதிக விளைச்சல் காரணமாக ஒரு கிலோ தட்டை பயிர் ஆறு ரூபாயாக குறைந்து விட்டது. இதனால் அதிக விலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தட்டை பயிரை பயிரிட்ட கோபி பகுதியை சேர்ந்த விவசாயிகள் ஏமாற்றத்தில் உள்ளனர்.

**உர இருப்பை அறிய கட்டுப்பாட்டு அறை**

நாமக்கல்: "உர இருப்புகளை விவசாயிகள் தெரிந்து கொள்ளும் வகையில், உரக்கட்டுப்பாட்டு அறை துவக்கப்பட்டுள்ளது' என, மாவட்ட வேளாண் இணை இயக்குனர் (பொறுப்பு) பிரபாகரன் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: மாவட்டத்தில் தற்போது குறுவை நெல் மற்றும் இதர மானாவாரி பயிர்கள் சாகுபடி தீவிரமாக நடந்து வருகிறது. சாகுபடி சய்யப்படும் பயிர்களின் தேவைக்கேற்ப உரங்களை தனியார் மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களில் இருப்பு வைத்து விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளபபட்டுள்ளது.விவசாயிகளின் தேவைக்கேற்ப உரங்களை இருப்பு வைத்து விநியோகம் செய்யவும், அதை கண்காணிக்கவும் நாமக்கல் வேளாண் இணை இயக்குனர் அலுவலகத்தில் உரக்கட்டுப்பாட்டு அறை துவங்கப்பட்டுள்ளது. அக்கட்டுப்பாட்டு அறை காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை செயல்படும். உரம் சம்பந்தப்பட்ட புகார்கள் ஏதும் இருப்பின் அது குறித்து, தகவல்களை 04286-280465 என்ற ஃபோன் எண்ணுக்கு தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**800 எக்டேரில் தேக்கு மரக்கன்றுகள் வனத்துறை திட்டம்**

திருப்புத்தூர்: மாவட்டத்தில், நடப்பு ஆண்டில் 800 எக்டேரில் தேக்கு மரக்கன்றுகள் நட திட்டமிடப்பட்டுள்ளது. வனத்துறை கோட்ட அலுவலர் மாரிமுத்து கூறியதாவது: மாவட்டத் தில், 800 எக்டேர் பரப்பளவில் தேக்கு மரத் தோட்டங் களை உருவாக்க திட்டமிட்டுள்ளோம். இதற்காக ஆயிரத்து 76 தேக்கு மரக்கன்றுகளும், தோப்புகளை உரவாக்க 13,500 மரக்கன்றுகளும் நடவுக்கு தயார் நிலையில் உள்ளது. இது தவிர தனியார் பட்டா நிலங்களில் வளர்க்க விரும்பினால், அவர்களுக்கு வழங்க 1.5 லட்சம் சவுக்கு மரக்கன்றுகள், 50 ஆயிரம் தடி மர கன்றுகளும் வழங்கப்படும்.

விவசாயிகளுக்கு வழங்க, 10 ஆயிரம் மரக் கன்றுகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மரக்கன்றுகளை நட விரும் புவோர் பெற்றுக்கொள்ளலாம்," என்றார்.

**ஏமாற்றியது மாம்பழ விளைச்சல் விலையும் வீழ்ச்சி**

சிவகங்கை: மாம்பழம் விளைச்சல் குறைந்துள்ள நிலையில், எதிர்பார்த்த விற்பனையும் இல்லை. இதனால், விலை கிடைக்காமல் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.
மாவட்டத்தில் சிங்கம்புணரி, சிவகங்கை, காளையார்கோவில், நாட்டரசன்கோட்டை, வாணியங்குடி, கல்லல் முத்துப்பட்டி, தேவகோட்டை அரசு பண்ணை பகுதிகளில், ஆயிரம் ஏக்கரில் மா மரங்கள் உள்ளன. இங்கு அல்போன்சா, இமாம்பசந்த், கல்லாமை, பாலாமணி, பங்கனப்பள்ளி, கிரேப் வகை பழங்கள் பயிரிடப்படுகின்றன.

கடந்த ஆண்டு மழை குறைவால், பருவம் தவறி தாமதமாக பூக்கள் பூத்தன. அவற்றில் 30 சதவீத மட்டுமே காய் பிடித்தன. ஆனால், பிஞ்சு விடும் பருவத்தில் மழை இல்லாததால், பிஞ்சுகள் உதிர்ந்து விட்டன.மழை குறைவால் காய்கள் உதிர்ந்து விடும் என நினைத்த சில விவசாயிகள், கிலோ 30 ரூபாய் என விற்று விட்டனர்.எதிர்பார்த்த விளைச்சல் இருக்காது என கணித்து, சிலர் காய்களை பறிக்காமல் விட்டு விட்டனர்.குறைவான விளைச்சல் கண்ட நிலையில், "கார்பைடு' கல் அபாயத்தால், மாம்பழ பிரியர்கள் வாங்க தயங்குகின்றனர். இதனால் பழங்களுக்கு விலை கிடைக்கவில்லை. பழமாக விற்றால் விலை இல்லை என்பதால், பலர் காயாக விற்கின்றனர். நல்ல லாபம் கிடைக்கும் என காத்திருந்த மா விவசாயிகள், இந்த ஆண்டு நஷ்டமே அடைந்துள்ளனர்.

**கொப்பரை ஏலம்: கிலோ ரூ.32.15**

பொள்ளாச்சி : ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்தில் ஒரு கிலோ கொப்பரைக்கு அதிகபட்சமாக 32.15 ரூபாய் விலை கிடைத்தது.

ஆனைமலை சுற்றுப்பகுதி விவசாயிகள் 38 பேர் 99 மூட்டை கொப்பரையை ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு கொண்டு வந்தனர். கொப்பரையை மூன்று வியாபாரிகள் ஏலம் எடுத்தனர். விற்பனைக்கூட கண்காணிப் பாளர் (பொறுப்பு) சந்திரசேகர் ஏலம் நடத்தினார்.முதல் தர கொப்பரை 76 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 31.40 ரூபாய் முதல் அதிகபட்சமாக 32.15 ரூபாய் வரை விலை கிடைத்தது. இரண்டாம் தர கொப்பரை 23 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 24.50 ரூபாய் முதல் அதிகபட்சமாக 28 ரூபாய் வரை விலை கிடைத்தது.அதிகாரிகள் கூறுகையில், "ஆனைமலை சுற்றுப்பகுதியில் கடந்த வாரம் மழை பெய்ததால், கொப்பரை உற்பத்தி பாதிக்கப்பட்டு வரத்து குறைந்துள்ளது. கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது, கொப்பரை கிலோவுக்கு 25 பைசா விலை குறைந்துள்ளது. கடந்த இரண்டு வாரங்களில் கிலோவுக்கு 1.20 ரூபாய் விலை குறைந்துள்ளது. வெளிமார்க்கெட்டில் கொப்பரை விலை சரிந்து வருவதால், ஏலத்தில் விலை குறைந்துள்ளது' என்றனர்.

**விவசாயிகளுக்கு மழைகாப்பீட்டு திட்டம்**

மதுரை: கடந்த ஆண்டு விவசாயிகளுக்காக மழைக் காப்பீட்டு திட்டத்தை மத்திய அரசு நிறுவனமான அக்ரிக்கல்சர் இன்சூரன்ஸ் கம்பெனி அமல்படுத்தியது. இதில் ஆறு மாவட்டங்களில் 9370 விவசாயிகள் சேர்ந்தனர். 5456 விவசாயிகளுக்கு ரூ. 2.39 கோடி நஷ்ட ஈடு வழங்கப் பட்டது. இத்திட்டமானது குறைந்தளவு மழை, கூடுதல் மழை, தொடர் வறண்ட தினங்களைக் கொண்டு நஷ்ட ஈடு கணக்கிடப்படுகிறது. இதில் முக்கியமாக தொடர் வறண்ட தினங்கள் மூலம் பல வட்டாரங்களில் மழையின் அளவு குறைந்து காணப்பட்டால் நஷ்ட ஈடு கணக்கிடப்படுகிறது.சிவகங்கை மாவட்டத்தில் , கன்னங்குடி வட்டாரத்திற்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 750ம்,

காளையார்கோயில் வட்டாரத்திற்கு ரூ.1250ம், கல்லல் வட்டாரத்திற்கு ரூ.400ம், இளையான்குடி வட்டாரத்திற்கு ரூ.750ம், தேவகோட்டை வட்டாரத்திற்கு ரூ.1253ம், திருப்பத்தூர் வட்டாரத்திற்கு ரூ.1250ம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.பிற வட்டாரங்களுக்கு நஷ்ட ஈடு திட்டத்தில் இல்லை. நஷ்ட ஈடானது ஜூலை முதல்வாரத்தில் விவசாயிகளின் முகவரிக்கு காசோலையாகவோ, வரைவோலையாகவோ வழங்கப்படும் என நிர்வாக அதிகாரி சூரியநாராயணன் தெரிவித்தார்.

**உளுந்து பயிரில் "மஞ்சள் தேமல்' நோயால் உற்பத்தி பாதிப்பு: விவசாயிகள் கவலை**

ராஜபாளையம்: உளுந்து பயிரில் மஞ்சள் தேமல் நோய் பாதிப்பு அதிகமாக உள்ளதால், உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் நஷ்டமடைந்துள்ளனர்.ராஜபாளையம் மற்றும் சுற்றுவட்டாரத்தில் முதல் போக நெல் சாகுபடி முடிந்த பின், கிணறுகளில் மிஞ்சிய தண்ணீரை வைத்து, 380 ஏக்கரில் உளுந்து பயிரிடப்பட்டது. பெரும்பாலான விவசாயிகள், ஏ.டி.டி., 3, வம்பன் 3, கோ 5 போன்ற ரகங்களை சாகுபடி செய்தனர். செடிகள் நன்கு வளர்ந்த நிலையில், வழக்கத்தை விட கடுமையாக கோடை வெயில் இருந்ததால் உளுந்து பயிரில் தத்துப்பூச்சி தாக்குதல் அதிகமாக இருந்தது. இந்த பூச்சிகள் மூலம் பரவிய "வைரஸால்' உளுந்தில் "மஞ்சள் தேமல்' நோய் பரவலாக ஏற்பட்டுள்ளன.செடியில் தண்டு, இலைப்பகுதியில் பச்சையம் குறைவாக இருப்பதால், காய்கள் குறைந்த அளவிலேயே காய்த்துள்ளன. தற்போது சில இடங்களில் அறுவடை துவங்கியுள்ள நிலையில், குறைவான உற்பத்தியே கிடைத்து வருவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். உளுந்து பயிரிட்டுள்ள பலருக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.இது குறித்து ராஜபாளையம் விவசாய உதவி இயக்குனர் தனசேகரனிடம் கேட்டபோது, ""சித்திரை பட்டத்தை விட வைகாசி பட்டத்தில் உளுந்து பயிரிடுவது தான் சிறந்தது. கோடை மழை கைகொடுக்கும் என்ற நம்பிக்கையில், ராஜபாளையத்தில் விவசாயிகள் உளுந்து பயிரிட்டனர். ஆனால் சீதோஷ்ண நிலை ஒத்துழைக்கவில்லை.வரும் காலங்களில் வம்பன் 4 என்ற ரகத்தை பயிரிட்டால், பருவ நிலை மாற்றங்களால் அதிக பாதிப்பு இருக்காது. உற்பத்தியும் அதிகமாக இருக்கும், என்றார்.

**பஞ்சு ஏற்றுமதிக்கு "கிரீன் சிக்னல்' பனியன் உற்பத்தியாளர்கள் அதிர்ச்சி**

திருப்பூர் : பஞ்சு ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை தளர்த்தும் மத்திய அரசின் முடிவால், திருப்பூர் பனியன் உற்பத்தியாளர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.தென்னிந்திய பனியன் உற்பத்தியாளர் சங்க (சைமா) தலைவர் ஈஸ்வரன் வெளியிட்டுள்ள அறிக்கை:வரும் அக்டோபர் முதல், பஞ்சு ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை தளர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஏற்கனவே, பிரதமர் மற்றும் மத்திய அமைச்சகத்துக்கு பலமுறை கடிதம் மூலமாக கோரிக்கை வைக்கப்பட்டது. அதன்படி, பருத்தி ஏற்றுமதிக்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அதற்கு பிறகும் நூல் விலை சாதகமாக அமையவில்லை. இந்நிலையில், அக்., முதல் தேதியில் இருந்து அனைத்து கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டு, பருத்தி ஏற்றுமதியாவது உறுதியாகியுள்ளது. அதனால், நூல் விலையும் அபரிமிதமாக உயரும்.

கடந்த 2009-10 பருத்தி சீசனின் போது, 73.76 லட்சம் பேல் பருத்தி ஏற்றுமதி செய்து, 7,700 கோடி ரூபாய்க்கு விற்பனையாகியுள்ளது. இதையே ஆடைகளாக மாற்றி ஏற்றுமதி செய்திருந்தால், 20 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமாக அன்னியச் செலாவணி ஈட்டியிருக்கலாம். பல லட்சம் தொழிலாளர்களின் வேலை வாய்ப்பும் பாதிப்படையாமல் இருந் திருக்கும். மத்திய ஜவுளித்துறை அமைச்சகம், உள்நாட்டு ஜவுளித்தொழிலையும், பல லட்சம் தொழிலாளர்களையும் பாதுகாக்க வேண்டும். இவ்வாறு, அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பசு வளர்ப்பு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு தலா ஒரு பசுமாடு வழங்கப்படும் விவசாய மந்திரி முல்லக்கரை ரத்னாகரன் பேச்சு

பாலக்காடு,ஜுன்.22–
பசு வளர்ப்பு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு தலா ஒரு பசுமாடு வழங்கப்படும் என்று விவசாய மந்திரி முல்லக்கரை ரத்னாகரன் கூறினார்.

விவசாயிகள் குறை தீர்க்கும் முகாம்

பாலக்காடு மாவட்ட தகவல் மையமும், மக்கள் தொடர்பு அலுவலகமும் இணைந்து பாலக்காடு மாவட்டம், குழல்மன்னத்தில் விவசாயிகளிடம் குறை கேட்கும் முகாமை நடத்தின. முகாமுக்கு ஆலத்தூர் பாராளுமன்ற தொகுதி பி.கே.பிஜூ எம்.பி. தலைமை தாங்கினார்.
முகாமை கேரள மாநில விவசாய மந்திரி முல்லக்கரை ரத்னாகரன் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார். பின்னர் அவர் பேசும் போது கூறியதாவது:–

தலா ஒரு பசுமாடு

கேரளாவின் நெற்களஞ்சியமாக பாலக்காடு மாவட்டம் விளங்குகிறது. பாலக்காடு மாவட்டத்தின் மேற்கு பகுதியில் தற்போது நெல் விளைச்சல் குறைந்து உள்ளது. நெல் விளைச்சல் குறைந்ததையொட்டி கடன் வாங்கி விவசாயம் பார்த்த விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.
விவசாயிகளின் துயரை துடைப்பதற்காக தலா ஒரு பசுமாடு வழங்க அரசு முடிவு எடுத்து உள்ளது. பசு வளர்ப்பு திட்டத்தின் கீழ் பசுமாடுகள் வழங்கப்படும்.
இவ்வாறு அவர் கூறினார்.
இந்த முகாமில் பாலக்காடு மாவட்ட கூட்டுறவு வங்கி தலைவர் கே.பி.ராமகிருஷ்ணன், விவசாய எந்திர தயாரிப்பு நிறுவன தலைவர் வி.சாமுண்ணி உள்பட பலர் கலந்து கொண்டு பேசினார்கள்.
முன்னதாக குழல்மன்னம் ஒன்றிய தலைவர் சி.ஏ.குப்பன் வரவேற்று பேசினார். முடிவில் மாவட்ட விவசாய அதிகாரி ரவீந்திரன் நன்றி கூறினார்.

## உற்பத்தி மற்றும் இறக்குமதி அதிகரிப்பால் ஆப்பிள் விலை குறைய வாய்ப்பு



நடப்பு 2010–ஆம் ஆண்டில், ஆப்பிள் விலை மிகவும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதிக அளவில் ஆப்பிள் உற்பத்தியாகும் இமாச்சலபிரதேசம் மற்றும் ஜம்மு – காஷ்மீர் ஆகிய இடங்களில்,

இவ்வாண்டு ஆப்பிள் உற்பத்தி மிகவும் அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலையில், ஆப்பிள் இறக்குமதியும் அதிகரிக்கும் என்ற நிலைப்பாடும் உள்ளது. இதுபோன்ற காரணங்களால், ஆப்பிள் விலை அதிக அளவில் குறைய வாய்ப்புள்ளது.

பருவ நிலை

சென்ற 2009–ஆம் ஆண்டில், சரியான பருவநிலை இல்லாததால், ஆப்பிள் உற்பத்தி மிகவும் குறைந்து போனது. குறிப்பாக, கடந்த 2008–ஆம் ஆண்டை விட, சென்ற ஆண்டில் உற்பத்தி 50 சதவீதம் சரிவடைந்தது. இதனால், உள்நாட்டு சந்தையில் ஒரு கிலோ ஆப்பிளின் விலை, அவ்வாண்டில் ரூ.150 வரை இருந்தது.

கடந்த 2008–ஆம் ஆண்டில், உள்நாட்டில் ஆப்பிள் உற்பத்தி 5.45 லட்சம் டன்னாக இருந்தது. இது, சென்ற 2009–ஆம் ஆண்டில் 2.80 லட்சம் டன்னாக குறைந்தது. இதனால், டெல்லி, மும்பை மற்றும் சென்னை ஆகிய நகரங்களில், ஒரு கிலோ ஆப்பிளின் விலை ரூ.150 வரை மிகவும் உயர்ந்திருந்தது.

கொள்முதல்

அதானி, கன்டெய்னர் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா (கன்கார்), தேவ் பூமி கோல்டு செயின் ஆகிய நிறுவனங்கள், ஆப்பிள் பருவத்தில், இமாச்சலபிரதேசம் உள்ளிட்ட ஆப்பிள் விளையும் இடங்களுக்கு நேரில் சென்று ஆப்பிளை கொள்முதல் செய்கின்றன. இவ்வகையில், சென்ற 2008–09–ஆம் ஆண்டில் இந்நிறுவனங்கள் ஒரு கிலோ ஆப்பிளை ரூ.35–40 என்ற விலையில் கொள்முதல் செய்தன. இது, சென்ற ஆண்டில் ரூ.60–65–ஆக அதிகரித்திருந்தது.

நடப்பு ஆண்டில், ஆப்பிள் விளையும் முக்கிய இடங்களில், பனிப்பொழிவு நல்ல அளவில் இருந்தது. இதனை தொடர்ந்து மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில், அப்பகுதிகளில் மழைப் பொழிவும் இருந்தது. இதனால், இவ்வாண்டு ஆப்பிள் உற்பத்தி அமோகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இறக்குமதி

தேவையை பூர்த்தி செய்யும் வகையில், உள்நாட்டு உற்பத்தி தவிர, வெளிநாடுகளில் இருந்தும் ஆப்பிள் இறக்குமதி செய்யப்படுகிறது. குறிப்பாக, அமெரிக்கா, சிலி மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளில் இருந்து அதிக அளவில் இறக்குமதி செய்யப்படுகிறது. உள்நாட்டு விலை நிலவரத்திற்கேற்ப இந்நாடுகளின் ஆப்பிள் விலை நிர்ணயிக்கப்படுகிறது. சந்தை மதிப்பீட்டின்படி, ஆண்டுக்கு சுமார் 80,000 டன் முதல் ஒரு லட்சம் டன் வரை ஆப்பிள்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

மலை பிரதேசங்களில் விளையும் ஆப்பிள்கள் குளிர் பதன கிடங்குகளில் பாதுகாக்கப்பட்டு, பின்பு நாட்டின் பல்வேறு இடங்களுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன.

தற்போது அடிப்படை கட்டமைப்பு வசதிகள் நல்ல அளவில் மேம்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக, ஃபீல்டு பிரஷ், எம்.எஸ்.எல். மற்றும் ரிலையன்ஸ் பிரஷ் ஆகிய நிறுவனங்கள், சென்ற ஆண்டில் இத்துறையில் புதிதாக களமிறங்கி உள்ளன. இந்நிறுவனங்கள், ஆப்பிள் உற்பத்தியாகும் இடங்களுக்கே சென்று, நேரிடையாக கொள்முதல் செய்து பின்பு அவற்றை தக்கமுறையில் பதப்படுத்தி, அவற்றின் சில்லரை விற்பனை மையங்களுக்கு அனுப்பி விற்பனை செய்கின்றன.

**ஜனவரி–ஏப்ரல் மாத காலத்தில் தேயிலை உற்பத்தி 12% உயர்வு**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

கொல்கத்தா

நடப்பு ஆண்டில், ஜனவரி – ஏப்ரல் மாத காலத்தில், தேயிலை உற்பத்தி 12% உயர்ந்து 16.20 கோடி

கிலோவாக அதிகரித்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 14.45 கோடி கிலோவாக இருந்தது. இதே காலத்தில் தேயிலை ஏற்றுமதி 20 சதவீதம் உயர்ந்து, 4.98 கோடி கிலோவிலிருந்து 6 கோடி கிலோவாக அதிகரித்துள்ளது.

ஏற்றுமதி

சென்ற 2009 காலண்டர் ஆண்டில் நாட்டின் மொத்த தேயிலை ஏற்றுமதியில் 5.7 சதவீதம் சரிவு ஏற்பட்டு 19.15 கோடி கிலோவாக குறைந்துள்ளது. எனினும், அவ்வாண்டு டிசம்பர் மாதத்திலிருந்து ஏற்றுமதி மேம்படத் தொடங்கியது. அம்மாதத்தில் தேயிலை ஏற்றுமதி, 37 சதவீதம் உயர்ந்து 2.22 கோடி கிலோவாக அதிகரித்தது.

கடந்த 2008–ஆம் ஆண்டில் தேயிலை உற்பத்தி 98.08 கோடி கிலோவாக இருந்தது. இது, சென்ற ஆண்டில் 97.89 கோடி கிலோவாக சற்று குறைந்தது. இந்நிலையில் நடப்பு ஆண்டின் முதல் 4 மாதங்களில் இதன் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி மகிழ்ச்சி அளிப்பதாக அமைந்துள்ளது.

இந்நிலையில், நாட்டின் மொத்த தேயிலை உற்பத்தியில் 50 சதவீத பங்களிப்பைக் கொண்டுள்ள அசாம் மாநிலத்தில், சென்ற மே மாதத்தில், கனமழை மற்றும் குறைந்த வெப்பநிலை காரணமாக உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

இது நாடு தழுவிய அளவில், நடப்பாண்டில், உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என இந்திய தேயிலை சங்கத்தின் தலைவர் ஆதித்ய கேதான் தெரிவித்தார். மே, ஜூன் மாதங்களில், தேயிலை உற்பத்தி, சென்ற ஆண்டின் இதே மாதங்களை விட, 20–30 சதவீதம் குறைய வாய்ப்புள்ளது என இத்துறையைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

உற்பத்தி

நடப்பாண்டில் ஜனவரி– ஏப்ரல் மாத காலத்தில், வட மாநிலங்களில் 8.81 கோடி கிலோ தேயிலை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 8.02 கோடி கிலோவாக இருந்தது. அதாவது, நடப்பாண்டில் இதுவரை 78 லட்சம் கிலோ தேயிலை அதிகமாக உற்பத்தி ஆகியுள்ளது. அதாவது, 10 சதவீதம் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. பருவநிலை சாதகமாக இருக்கும் பட்சத்தில், இவ்வாண்டில் 9.90 கோடி கிலோ உற்பத்தியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதே காலத்தில், தென் மாநிலங்களில் தேயிலை உற்பத்தி 15 சதவீதம் உயர்ந்து 7.39 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது.

நம் நாடு சி.டி.சி. ரக தேயிலையை, பிரதானமாக எகிப்து, பாகிஸ்தான் மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. உயர்தர ஆர்தோடக்ஸ் தேயிலை, ஈராக், ஈராக் மற்றும் ரஷியா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

**கூடலூர் பகுதியில் பருவமழை தீவிரம்: ஆயிரக்கணக்கான ஏக்கரில் இஞ்சி பயிர்கள் நடவு செய்யும் பணி தொடக்கம்**



பருவ மழை தொடங்கி உள்ளதால் கூடலூர் பகுதியில் ஏக்கர் கணக்கில் இஞ்சி பயிரிடப்பட்டுள்ளதை படத்தில் காணலாம்.

கூடலூர், ஜூன்.22–
கூடலூர் பகுதியில் பருவ மழை தொடங்கியதால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் இஞ்சி பயிரிடும் விவசாய பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.
விவசாய நிலங்கள் உலர்த்துதல்
நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி, குன்னூர், கோத்தகிரி பகுதிகளில் காலிபிளவர், முட்டைக்கோஸ், உருளைக் கிழங்கு, காரட், பீட்ரூட் உள்ளிட்ட காய்கறிகள் விளைகின்றன. ஆனால் பணப்பயிர்களாக காபி, ஏலக்காய், இஞ்சி, குறுமிளகு, கிராம்பு பயிர்கள் கூடலூர், பந்தலூர் தாலுகா பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் விளைவிக்கப்படுகின்றன.
இதுதவிர சமவெளி பிர தேசங்களில் விளையக்கூடிய காய்கறிகளும் விளைகின்றன. இதனால் பல்வேறு காலநிலை களுக்கு ஏற்ப விளையக்கூடிய காய்கறிகளை கூடலூர், பந்தலூர் தாலுகா விவசாயிகள் பயிரிடுகின்றனர்.
அதிகம் லாபம் தரக்கூடிய இஞ்சி விவசாயம் செய்வதில் கூடலூர் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இதற்காக கடந்த ஏப்ரல், மே மாதங்களில் ஆயிரக்கணக் கான ஏக்கர் நிலங்களில் இஞ்சி நடுவதற்காக டிராக்டர் மூலம் உழுது நிலங்களை உலர்த்தும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டனர்.
இஞ்சி பயிர்கள் நடவும் பணி தொடக்கம்
இந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு தென்மேற்கு பருவமழை கூடலூர், பந்தலூர் தாலுகா வில் பெய்ய தொடங்கியது. இதனால் மிதமான குளிர் காலநிலை நிலவி வருகிறது. இதையொட்டி உலர் நிலங்களில் இஞ்சி நடவு செய்யும் பணியை விவசாயிகள் தொடங்கி வருகின்றனர்.
கூடலூர் பகுதியில் தொரப் பள்ளி, ஸ்ரீமதுரை, தேவர் சோலை மற்றும் பந்தலூர் தாலுகாவில் எருமாடு, அய்யங்கொல்லி, சேரம்பாடி, கொளப்பள்ளி, பிதிர்காடு, பாட்டவயல் ஆகிய பகுதி களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் இஞ்சி பயிரிடப்பட்டுள்ளது. இத னால் இஞ்சி விவசாயம் களை கட்டி உள்ளது. இதனால் வரும் காலங்களில் இஞ்சி விளைச்சல் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**சிறு தேயிலை விவசாயிகள் சங்கம் சார்பில் மினி தேயிலை தொழிற்சாலை அமைக்க நடவடிக்கை தேயிலை வாரிய தென் மண்டல செயல் இயக்குனர் பேட்டி**

குன்னூர், ஜூன்.22–
சிறு தேயிலை விவசாயி கள் சங்கம் சார்பில் மினி தேயிலை தொழிற்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேயிலை வாரிய தென் மண்டல செயல் இயக்குனராக பதவி ஏற்ற அம்பலவாணன் கூறினார்.
புதிய இயக்குனர் நியமனம்
தேயிலை வாரிய தென் மண்டல செயல் இயக்குனராக பணியாற்றிய ஆர்.டி.நசீம் இமாசல பிரதேசத்திற்கு மாற் றப்பட்டார். அவருக்கு பதி லாக கேரள மாநிலத்தில் துணை அக்கவுண்டெண்ட் ஜெனரலாக பணியாற்றிய அம்பலவாணன் தேயிலை வாரிய தென் மண்டல செயல் இயக்குனராக நியமிக்கப்பட் டார். தேயிலை வாரிய தென் மண்டல செயல் இயக்குனராக அம்பலவாணன் குன்னூரில் உள்ள தேயிலை வாரிய அலுலகத்தில் நேற்று பதவி ஏற்று கொண்டார். அதன் பிறகு செயல் இயக்குனர் அம்பலவாணன் நிருபர் களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறிய தாவது:–
மகசூல் அதிகரிப்பு
நீலகிரி மாவட்டத்தின் பொருளாதார முதுகெலும் பாக தேயிலை தொழில் உள்ளது. தற்போது நீலகிரி மாவட்டம் முழுவதும் பச்சை தேயிலை மகசூல் அதிகரித்து உள்ளது. இதனால் தேயிலை தொழிற்சாலைகளில் தேயிலை உற்பத்தி அதிக அளவு உள்ளது.
பச்சை தேயிலை மகசூல் அதிகரித்து உள்ளதால் தேயிலை தொழிற்சாலைகளில் கூடுதல் தேயிலை தூள் உற்பத்தி செய்ய முடியாத நிலை உள்ளது. இதனால் பச்சை தேயிலையின் விலை குறைவடைந்து வருகிறது.
விலை குறைவு காரணமாக தேயிலை சிறு விவசாயிகள் மிகவும் கவலையில் ஆழ்ந்து உள்ளனர். இது

போன்ற காலங்களில் தொழிற்சாலை களின் உற்பத்தி அதிகரிக்கும் வகையில் திட்டம் வகுக்கப் படும். இதன்படி சிறு தேயிலை விவசாயிகள் சங்கம் மூலம் மினி தேயிலை தொழிற் சாலை அமைக்க ஏற்பாடு செய்யப் படும்.

கருத்து

தரமான தேயிலைக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. பச்சை தேயிலைக்கு கணிசமாக விலை கிடைக்கும் வகையில் விவசாயிகள், தேயிலை தொழிற் சாலைகள், தரகர்கள், வியாபாரிகள் ஆகியோரிடம் கருத்து கேட்கப்பட்டு அதன் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தேயிலை வாரியம் மூலம் சிறு தேயிலை விவசாயிகளுக் கும், தேயிலை தொழிலாளர் களுக்கும் இது வரை வழங்கப் பட்டு வந்த சலுகைகள் தொடர்ந்து வழங்கப்படும்.

கடும் நடவடிக்கை

கலப்பட தேயிலை உற்பத்தி செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இது குறித்து சிறு தேயிலை விவசாயிகள் மற்றும் பொது மக்கள் தேயிலை வாரியத்திற்கு தகவல் கொடுக்கலாம். தகவல் கொடுப்பவர்களின் விபரங்கள் பாதுகாப்பாக வைக்கப் படும்.

இவ்வாறு செயல் இயக்குனர் அம்பலவாணன் கூறினார்.